www.Padasalai.Net www.CBSEtips.in

# செலக்சன்

8

## தமிழ்

www.Padasalai.Net

அன்பு நிலையம்
மதுரை - 625001

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# செலக்சன்

## எட்டாம் வகுப்பு

## 8

## தமிழ்

94430 43338
94430 46662

வெளியிடுபவர்

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001.

**விலை ₹ 160**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பொருளடக்கம்

## தமிழ்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | | | பக்க எண் |
|---|---|---|---|---|---|
| | மொழி | மனப்பாடப்பகுதி * | | | 4 |
| 1. | | 1.அ | தமிழ்மொழி வாழ்த்து * | – செய்யுள் | 8 |
| | | 1.ஆ | தமிழ்மொழி மரபு | – செய்யுள் | 11 |
| | தமிழ் இன்பம் | 1.இ | தமிழ் வரிவடிவ வளர்ச்சி | – உரைநடை | 13 |
| | | 1.ஈ | சொற்பூங்கா | – துணைப்பாடம் | 17 |
| | | 1.உ | எழுத்துகளின் பிறப்பு | – இலக்கணம் | 18 |
| | | 1.ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 20 |
| | | 1.எ | மொழியோடு விளையாடு | – மொழிப்பயிற்சி | 22 |
| 2. | இயற்கை | 2.அ | ஓடை * | – செய்யுள் | 24 |
| | | 2. ஆ | கோணக்காத்துப் பாட்டு | – செய்யுள் | 26 |
| | ஈடில்லா | 2. இ | நிலம் பொது | – உரைநடை | 29 |
| | இயற்கை | 2. ஈ | வெட்டுக்கிளியும் சருகுமானும் | –துணைப்பாடம் | 32 |
| | | 2.உ | வினைமுற்று | – இலக்கணம் | 34 |
| | | 2.ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 36 |
| | | 2. எ | மொழியோடு விளையாடு | – மொழிப்பயிற்சி | 38 |
| | | 2.ஏ | திருக்குறள் * | – செய்யுள் | 39 |
| 3. | அறிவியல், | 3.அ | நோயும் மருந்தும் * | – செய்யுள் | 42 |
| | தொழில்நுட்பம் | 3.ஆ | வருமுன் காப்போம் * | – செய்யுள் | 44 |
| | உடலை ஓம்புமின் | 3.இ | தமிழர் மருத்துவம் | – உரைநடை | 46 |
| | | 3. ஈ | தலைக்குள் ஓர் உலகம் | – துணைப்பாடம் | 49 |
| | | 3.உ | எச்சம் | – இலக்கணம் | 50 |
| | | 3.ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 53 |
| | | 3.எ | மொழியோடு விளையாடு | – மொழிப்பயிற்சி | 55 |
| 4. | கல்வி | 4.அ | கல்வி அழகே அழகு * | – செய்யுள் | 57 |
| | கல்வி கரையில | 4.ஆ | புத்தியைத் தீட்டு | – செய்யுள் | 59 |
| | | 4.இ | பல்துறைக் கல்வி | – உரைநடை | 61 |
| | | 4.ஈ | ஆன்ற குடிப்பிறத்தல் | – துணைப்பாடம் | 65 |
| | | 4.உ | வேற்றுமை | – இலக்கணம் | 66 |
| | | 4.ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 68 |
| | | 4.எ | மொழியோடு விளையாடு | – மொழிப்பயிற்சி | 73 |
| 5. | கலை, | 5.அ | திருக்கேதாரம் | – செய்யுள் | 74 |
| | அழகியல், | 5.ஆ | பாடறிந்து ஒழுகுதல் * | – செய்யுள் | 76 |
| | பண்பாடு | 5. இ | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | – உரைநடை | 79 |
| | குழலினிது | 5. ஈ | தமிழர் இசைக்கருவிகள் | – துணைப்பாடம் | 83 |
| | யாழினிது | 5.உ | தொகைநிலை,<br>தொகாநிலைத் தொடர்கள் | – இலக்கணம் | 84 |
| | | 5. ஊ | மொழியை ஆள்வோம் | – மொழிப்பயிற்சி | 87 |
| | | 5.எ | மொழியோடு விளையாடு | – மொழிப்பயிற்சி | 90 |
| | | 5.ஏ | திருக்குறள் * | – செய்யுள் | 91 |


www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6. | நாகரிகம், தொழில்,வணிகம் வையம்புகழ் வணிகம் | 6.அ வளம் பெருகுக – செய்யுள் | 94 |
| | | 6.ஆ மழைச்சோறு – செய்யுள் | 96 |
| | | 6.இ கொங்குநாட்டு வணிகம் – உரைநடை | 98 |
| | | 6.ஈ காலம் உடன் வரும் – துணைப்பாடம் | 102 |
| | | 6.உ புணர்ச்சி – இலக்கணம் | 104 |
| | | 6.ஊ மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 106 |
| | | 6.எ மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 109 |
| 7. | நாடு, சமூகம் பாருக்குள்ளே நல்ல நாடு | 7.அ படை வேழம் * – செய்யுள் | 110 |
| | | 7.ஆ விடுதலைத் திருநாள் – செய்யுள் | 112 |
| | | 7.இ பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் – உரைநடை | 115 |
| | | 7.ஈ அறிவுசால் ஔவையார் – துணைப்பாடம் | 118 |
| | | 7.உ வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் – இலக்கணம் | 122 |
| | | 7.ஊ மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 124 |
| | | 7.எ மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 127 |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை அறத்தால் வருவதே இன்பம் | 8.அ ஒன்றே குலம் * – செய்யுள் | 129 |
| | | 8.ஆ மெய்ஞ்ஞான ஒளி – செய்யுள் | 131 |
| | | 8.இ அயோத்திதாசர் சிந்தனைகள் – உரைநடை | 132 |
| | | 8.ஈ மனித யந்திரம் – துணைப்பாடம் | 135 |
| | | 8.உ யாப்பு இலக்கணம் – இலக்கணம் | 137 |
| | | 8.ஊ மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 140 |
| | | 8.எ மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 143 |
| | | 8.ஏ திருக்குறள் * – செய்யுள் | 144 |
| 9. | மனிதம், ஆளுமை குன்றென நிமிர்ந்துநில் | 9.அ உயிர்க்குணங்கள் – செய்யுள் | 146 |
| | | 9.ஆ இளைய தோழனுக்கு – செய்யுள் | 148 |
| | | 9.இ சட்டமேதை அம்பேத்கர் – உரைநடை | 150 |
| | | 9.ஈ பால் மனம் – துணைப்பாடம் | 154 |
| | | 9.உ அணி இலக்கணம் – இலக்கணம் | 155 |
| | | 9.ஊ மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 157 |
| | | 9.எ மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 160 |
| | | * இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி | |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# மனப்பாடப்பகுதி

## இயல்– 1.

### தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி ! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே !

– பாரதியார்

## இயல்– 2.

### ஓடை

ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
(ஓடை ஆட ...)

பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி!
(ஓடை ஆட ...)

நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி
(ஓடை ஆட ...)

நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்!
(ஓடை ஆட ...)

– வாணிதாசன்

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**திருக்குறள்**

**நடுவுநிலைமை**

1) தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

**கூடா ஒழுக்கம்**

4) கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

**கல்லாமை**

6) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

**குற்றங்கடிதல்**

8) தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

**– திருவள்ளுவர்**

**இயல்– 3.**

**நோயும் மருந்தும்**

போர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
போர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே.
(பா. 116)
– ஆசிரியர் அறியப்படவில்லை

**வருமுன் காப்போம்**

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ!

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

**– கவிமணி தேசிக விநாயகனார்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மனப்பாடப்பகுதி

### இயல்– 4.

**கல்வி அழகே அழகு**

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்

**– குமரகுருபரர்**

### இயல்– 5.

**பாடறிந்து ஒழுகுதல்**

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

**திருக்குறள்**

**<u>தெரிந்து விளையாடல்</u>**

2) இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

**<u>சொல்வன்மை</u>**

7) கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

8) சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

**– திருவள்ளுவர்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# மனப்பாடப்பகுதி

## இயல்– 7.

### படைவேழம்

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் எனநடுங்கியே (3)

– செயங்கொண்டார்

## இயல்– 8.

### ஒன்றே குலம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே

– திருமூலர்

### திருக்குறள்

**படைச்செருக்கு**

1. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

**நட்பு**

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

**பண்புடைமை**

9. பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

– திருவள்ளுவர்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செலக்சன் 8 தமிழ்

இயல் ஒன்று

மொழி

## 1. தமிழ் இன்பம்

இயல் ஒன்று

கவிதைப்பேழை

## 1.அ. தமிழ்மொழி வாழ்த்து – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் _____**

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி **விடை : அ) வைப்பு**

**2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) என்+ றென்றும் ஆ) என்று + என்றும்

இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும் **விடை : ஆ) என்று + என்றும்**

**3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது

இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது **விடை : இ) வானம் + அளந்தது**

**4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) அறிந்தது அனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும் **விடை : இ) அறிந்ததனைத்தும்**

**5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) வானம் அறிந்து ஆ) வான்அறிந்த

இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த **விடை : இ) வானமறிந்த**

---

**II. தமிழ்மொழி வாழ்த்து – இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**

**விடை : அடிமோனை :**

| 1. | 2. | 3. | 4. |
|---|---|---|---|
| வாழ்க | வானமளந்தது | எங்கள் | வானம் |
| வாழிய | வண்மொழி | என்றென்றும் | வளர்மொழி |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. குறுவினா.**

**1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது ?**

**விடை :**

★ தமிழ் மொழி ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்டு வாழ்கிறது.

**2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது ?**

**விடை :**

★ தமிழ் மொழி வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது.

**IV. சிறுவினா.**

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

**விடை :**

★ தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்கிறது.

★ தமிழ்மொழி ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமானது.

★ தமிழ்மொழி ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச்செய்து, புகழ் கொண்டது.

★ எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ளவரையிலும் வாழும்.

★ எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்.

★ அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படையும்.

★ பொருந்தாத பழைய கருத்துக்களால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிரட்டும்.

★ தமிழ்மொழி வாழ்க ! தமிழ்மொழி வாழ்க ! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க !

★ தமிழ்மொழி வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப்பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் எனப் பாரதியார் தமிழ் மொழியை வாழ்த்துகிறார்.

**V. சிந்தனை வினா**

**பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன ?**

**விடை :**

★ தமிழ் மொழி சொல்வளம் நிறைந்தது.

★ எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் மொழி.

★ பழமைவாய்ந்த மொழி.

★ தமிழ்மொழி தனித்து இயங்கும்.

★ அதனால் பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைத்தார்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இசை எனும் சொல்லின் பொருள் ________**

அ) மகிழ் ஆ) புகழ் இ) இகழ் ஈ) திகழ் **விடை : ஆ) புகழ்**

**2. செந்தமிழ்த்தேனீ என்று புகழப்பட்டவர்**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்

இ) வாணிதாசன் ஈ) சுரதா **விடை : ஆ) பாரதியார்**

**3. சிந்துக்குத் தந்தை என்று பாரதியாரைப் புகழ்ந்தவர்.........**

அ) கண்ணதாசன் ஆ) பாரதிதாசன்

இ) வாணிதாசன் ஈ) காளிதாசன் **விடை : ஆ) பாரதிதாசன்**

**4. "ஏழ்கடல்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........**

அ) ஏழ் + கடல் ஆ) ஏழு + கடல்

இ) ஏழ்மை + கடல் ஈ) எளிமை + கடல் **விடை : ஆ) ஏழு + கடல்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. வையகம் என்னும் சொல்லின் பொருள் ........... **விடை : உலகம்**
2. __________ என்னும் தொகுப்பில் தமிழ்மொழி வாழ்த்து இடம்பெற்றுள்ளது. **விடை : பாரதியார் கவிதைகள்**
3. சந்திரிகையின் கதை என்ற நூலின் ஆசிரியர் ........... **விடை : பாரதியார்**
4. சீட்டுக்கவிகளை எழுதியவர் __________ ஆவார். **விடை : பாரதியார்**

**III. குறுவினா.**

**1) தமிழ்நாடு எவ்வாறு ஒளிர்கிறது ?**

**விடை :** தமிழ்நாடு பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி ஒளிர்கிறது.

**2) பாரதிதாசன் பாரதியாரை எவ்வாறு புகழ்ந்துள்ளார் ?**

**விடை :** பாரதிதாசன் பாரதியாரை சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் புகழ்ந்துள்ளார்.

**IV. சிறுவினா.**

**பாரதியார் ஆசிரியர் குறிப்பு வரைக**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சி. சுப்பிரமணிய பாரதியார் |
| பிறப்பு | : | 11.12.1882 |
| இறப்பு | : | 11.09.1921 |
| ஊர் | : | எட்டயபுரம் |
| பெற்றோர் | : | சின்னசாமி – இலக்குமி அம்மையார் |
| பணி | : | கவிஞர், எழுத்தாளர் |
| நடத்திய இதழ்கள் | : | இந்தியா, விஜயா |
| உரைநடைநூல்கள் | : | சந்திரிகையின் கதை, தராசு |
| செய்யுள் நூல்கள் | : | பாப்பாப்பாட்டு, கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, சீட்டுக்கவி |
| சிறப்புப்பெயர் | : | சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த்தேனீ, புதிய அறம் பாடவந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் |

**கற்பவை கற்றபின்**

**1) "தமிழ்மொழி வாழ்த்து" – பாடலை இசையுடன் பாடி மகிழ்க**

*வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி !*
*வாழிய வாழியவே !*

*வான மளந்தது அனைத்தும் அளந்திடு*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*

*எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*

*தொல்லை வினைதரு தொல்லை அகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழியே!*

*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

**– பாரதியார்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



விரிவானம்

## இயல் ஒன்று

## 1. ஈ. சொற்பூங்கா – துணைப்பாடம்

**மதிப்பீடு**

**தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**விடை :**

★ மொழி என்பதற்குச் சொல் என்பதும் ஒரு பொருள். மொழியை (சொல்லை) ஓரெழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.

★ ஓர் எழுத்து மொழி எவை எனின் நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர்.

★ நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார். நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

★ பூ என்பது ஓரெழுத்து ஒரு மொழி. கா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி. இவை இரண்டையும் இணைத்துப் பூங்கா எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர்.

★ ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே இன்னவாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும் உள்ளன, ஆ, மா என்பவை இணைந்து ஆமா என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு.

★ மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம். இவ்வாறெல்லாம் இயல்பாக மா என்னும் ஓரெழுத்து ஒருமொழி மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் திகழ்கின்றது.

★ ஈ என்னும் பொதுப் பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் ஈ எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது.

★ போ, வா, நீ, கூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களே. நன்னூலார் போட்ட பட்டியலில் உள்ளவை பற்றிக் கருதாமல் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தால் சில விளக்கங்கள் கிட்டும்.

★ இன்னொரு வகையாகவும் பார்க்கலாம். ஆன் என்பது ஆ ஆகியது; மான் என்பது மா ஆகியது.

★ எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது.

★ ஏவு என்னும் சொல் ‘ஏ’ என்று ஆனது மட்டுமன்றி ‘எய்’ எனவும் ஆயிற்று.

★ தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். இத்தகைய தமிழ்மொழியின் சொற்களை, மொழிப்பற்றை மீட்டெடுத்தலே வழிகாட்டிகளுக்கு முதல் கடமையாய் நிற்கிறது.

★ மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான்; அதன் இனத்தை, பண்பாட்டை காப்பான் என்று இளங்குமரனார் கூறுகிறார்.

**கற்பவை கற்றபின்**

**ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம்பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

**விடை :**

1. முக்கனிகளுள் ஒன்று மா.
2. தை பிறந்தால் வழி பிறக்கும்.
3. ஆ என்றால் பசு.
4. பூ அழகாக மலர்ந்தது.
5. தீ கொண்டு குப்பைகளை எரித்தான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் மூன்று

## 3. உடலை ஓம்புமின்

கவிதைப்பேழை

இயல் மூன்று

## 3.அ. நோயும் மருந்தும் – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. உடல்நலம் என்பது _______ இல்லாமல் வாழ்தல் ஆகும்.**
அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி **விடை : இ) பிணி**

**2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ______**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **விடை : ஆ) மூன்று**

**3. 'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**
அ) இ + யுண்டார் ஆ) இவ் + உண்டார்
இ) இவை + உண்டார் ஈ) இவை + யுண்டார் **விடை : இ) இவை + உண்டார்**

**4. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____**
அ) தாம் இனி ஆ) தாம்மினி
இ) தாமினி ஈ) தாமனி **விடை : இ) தாமினி**

---

**II. குறுவினா**

**1. நோயின் மூன்று வகைகள் யாவை ?**
**விடை : நோயின் மூன்று வகைகள் :**
1. மருந்தினால் நீங்கும் நோய்கள்.
2. எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்.
3. அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தரும் நோய்கள்.

---

**2. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை ?**
**விடை :**
★ நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகும்.

---

**III. சிறுவினா**

**நோயின் வகைகள் அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை ?**
**விடை : நோயின் வகைகள்:**
★ மருந்தினால் நீங்கும் நோய்கள்.
★ எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்.
★ அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன.
**நோயினைத் தீர்க்கும் வழிகள்:**
★ நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்பனவற்றை ஏற்றோர் பிறவித் துன்பத்திலிருந்து நீங்கி உயரிய இன்பத்தை அடைவர்.

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**IV. சிறுவினா**

**கவிமணி தேசிக விநாயகனார் குறிப்பு தருக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிமணி தேசிக விநாயகனார் |
| பிறப்பு | : | 27.07.1876 |
| இறப்பு | : | 26.09.1954 |
| பிறந்த இடம் | : | குமரி மாவட்டத்திலுள்ள தேரூர் |
| பணி | : | ஆசிரியர் |
| பெற்றோர் | : | சிவதாணு – ஆதிலட்சுமி |
| எழுதிய கவிதை நூல்கள் | : | ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை |
| மொழிபெயர்ப்பு நூல் | : | உமர்கய்யாம் பாடல்கள் |

**கற்பவை கற்றபின்**

**1. 'தன் சுத்தம்' என்னும் தலைப்பில் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**

**விடை :**



**2. சுகாதாரம் பற்றிய பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.**

**(எ.கா) சுத்தம் சோறு போடும்**

**விடை :**

★ கந்தையானாலும் கசக்கிக்கட்டு.
★ கூழானாலும் குளித்துக்குடி.
★ நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்.
★ வருமுன் காப்போம்.

**உரைநடை உலகம்**

**இயல் மூன்று**

## 3.இ. தமிழர் மருத்துவம் (நேர்காணல்) – உரைநடை

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு ______ பயன்படுத்தினர்.**
அ) தாவரங்களை ஆ) விலங்குகளை
இ) உலோகங்களை ஈ) மருந்துகளை **விடை : அ) தாவரங்களை**

**2. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ______ நீட்சியாகவே உள்ளது.**
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின்
இ) உணவின் ஈ) வாழ்வின் **விடை : இ) உணவின்**

**3. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று.**
அ) தலைவலி ஆ) காய்ச்சல்
இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு **விடை : ஈ) இரத்தக் கொதிப்பு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



★ பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க அறிவாற்றல், பிரச்சனைகளை அலசுதல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது, நம் மொழி அறிவு இவற்றையெல்லாம் இடது பகுதி பார்த்துக்கொள்கிறது.

★ வடிவங்களை உணர்வது கவிதை எழுதுவது படம் போடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை தொடர்பானவை எல்லாம் வலது பாதியில்தான்.

★ வலது பாதி சரியில்லையெனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம்.

★ வலது பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் நடிகர்கள், பாடகர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கருவிகளைக் கையாளுபவர்கள் இன்ன பிறர்.

★ இடது பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்கள், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள் போன்றோர்.

★ இடதும் வலதும் சரியான அளவில் கலந்து இருப்பவர்களும் உண்டு.

**கற்பவை கற்றபின்**

**மூளையின் செயல்கள் குறித்துப் பிற நூல்களிலிருந்து தகவல்களைத் திரட்டி எழுதுக.**

**விடை :**

★ குட்டித்தூக்கம் மூளையின் செயல்திறனை மேம்படுத்த உதவும். நாம் தூங்கும் போது மூளையின் வலது பக்கம் ஒழுங்குப்படுத்தல். கடமைகளை கையாளுகிறது. அதாவது இடதுபக்க மூளை ஓய்வு எடுக்கும் பொழுது வலது மூளை அன்றைய தினத்தில் நடந்த செய்திகளை நீண்ட கால ஞாபகச் சேமிப்பில் மாற்றி அந்த நினைவுகளை உறுதிப்படுத்தும்.

★ நமது மூளையில் உள்ள மெல்லிய நரம்பு இழைகள் 1 லட்சத்து 61 ஆயிரம் கிலோமீட்டர் நீளம் நீண்டு பின்னிப் பிணைந்திருக்கின்றன. இந்த நரம்புகள் தான் நமது உடலின் அத்தனை பாகங்களுக்கும் தகவல்களை அனுப்புகின்றன.

★ தியானம் மூளையை அமைதிப்படுத்தும். மேலும் மூளைக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும்.

## இயல் மூன்று — கற்கண்டு

## 3.உ. எச்சம் – இலக்கணம்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. **முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ________ எனப்படும்.**
   அ) முற்று ஆ) எச்சம்
   இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம் **விடை : ஆ) எச்சம்**
2. **கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ________**
   அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த **விடை : ஈ) பார்த்த**
3. **குறிப்பு வினையெச்சம் _____ வெளிப்படையாகக் காட்டாது.**
   அ) காலத்தை ஆ) வினையை
   இ) பண்பினை ஈ) பெயரை **விடை : அ) காலத்தை**

**II. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. | நடந்து | – முற்றெச்சம் |
| ஆ. | பேசிய | – குறிப்புப் பெயரெச்சம் |
| இ. | எடுத்தனன் உண்டான் | – பெயரெச்சம் |
| ஈ. | பெரிய | – வினையெச்சம் |

**விடைகள் :**

| | |
|---|---|
| **அ.நடந்து** | **– வினையெச்சம்** |
| **ஆ.பேசிய** | **– பெயரெச்சம்** |
| **இ.எடுத்தனன் உண்டான்** | **– முற்றெச்சம்** |
| **ஈ.பெரிய** | **– குறிப்புப் பெயரெச்சம்** |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**நோய் வரக் காரணங்கள் :**

★ சுற்றுச்சூழல் மோசமாக இருந்தால் நோய் வரும். நோய்க் கிருமிகளை உண்டாக்கும் கொசு, எலி, கரப்பான் பூச்சி ஆகியவை வீட்டில் இருந்தால் நோய்கள் பரவும்.

★ வீட்டில் மட்டுமல்லாது குப்பைகள், புட்டி, நெகிழி போன்றவற்றைக் கண்ட இடங்களில் வீசுவதால் நோய்கள் பரவுகின்றன.

**நோய் தீர்க்கும் வழிமுறைகள் :**

நோயற்ற வாழ்விற்குச் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது அவசியமாகும். நாம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதால் வியாதிகள் நம்மை அணுகாது வீட்டில் உள்ளும் புறமும் பேண வேண்டும். கொசுக்கள் உட்காரும் நீரினைத் தேக்கிவைக்கக்கூடாது.

**வருமுன் காத்தல்:**

"வெள்ளம் வருமுன் அணைபோடு" என்பது பழமொழி. நோய்வந்தபின் அவதியுறுவதைவிட நோய் வரும்முன் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். மழைக்காலங்களில் குடிநீரினைக் காய்ச்சிக்குடிக்க வேண்டும். நன்னெறிகளைக் கடைபிடித்தால் நோய் வராமல் தடுக்கலாம்.

புகைபிடித்தல், மது அருந்துதல் போன்றவை உடல்நலத்திற்குக் கேடு தரும் என்று அறிந்து அப்பழக்கங்களில் நம்மை ஈடுபடுத்தக் கூடாது.

**உணவும் மருந்தும் :**

முன்பு உணவே மருந்தாகவும் , மருந்தே உணவாகவும் இருந்தது. அதாவது நோய் தீர்க்கும் மருந்துகளான மஞ்சள், கொத்தமல்லி, சீரகம், மிளகு, பூண்டு, சிறிய வெங்காயம், பெருங்காயம், இஞ்சி போன்றவை அன்றாட உணவுடன் சேர்த்து உண்ணப்பட்டன.

**உடற்பயிற்சியின் தேவை:**

நலமான வாழ்க்கையை விரும்புவதாக இருந்தால் நீங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும். இளமையிலேயே உயிருக்கு உலை வைக்கும் இதயநோய், சர்க்கரைநோய், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களை வேரறுப்பதில் தினமும் உடற்பயிற்சியின் தேவை அவசியமாகிறது. மனஅமைதி மற்றும் நல்ல தூக்கம் தருவதற்கும் உடற்பயிற்சி அவசியம்.

**முடிவுரை :**

அரிது அரிது, மானிடராய் பிறத்தல் அரிது அதனைவிட கூன், குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அதைவிட அரிது என்பதுபோல, நாம் எக்குறையும் இல்லாமல் பிறந்திருக்கிறோம் அதனால் நமக்குக் கிடைத்த இவ்வுடலை நோயின்றி வைத்திருப்பது நமது கடமையாகும்.

---

**இயல் மூன்று**

## 3.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்களை எழுதுக.**



**விடை :**

1. நாட்டு வைத்தியம்.
2. உணவே மருந்து ; மருந்தே உணவு.
3. பழந்தமிழர் மருத்துவம்.
4. மூலிகைகள் பக்கவிளைவுகள் இல்லாதவை.
5. இடித்து உண்ட மருந்தே என்றும் இன்ப வாழ்வைத் தரும்.
6. மூலிகை மருந்துகள் சுற்றுச்சூழலைச் சிதைக்காது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**II. வட்டத்திலுள்ள பழமொழிகளைக் கண்டுபிடித்து எழுதுக.**

**விடை :**



*வருமுன் காப்போம்! ...*
*முயற்சி திருவினைஆக்கும்!...*
*நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!...*
*அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு!...*
*சுத்தம் சோறு போடும் !...*
*சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்!...*
*பருவத்தே பயிர்செய்!...*
*கூடிவாழ்ந்தால் கோடி நன்மை!...*
*அறிவே ஆற்றல்!....*
*பசித்துப் புசி!...*

**நிற்க அதற்குத் தக...**

**III. என் பொறுப்புகள்...**

1. காலை மாலை உடற்பயிற்சி செய்வேன்.
2. உரிய நேரத்தில் உறங்கச் செல்வேன்; உரிய நேரத்தில் விழித்தெழுவேன்.

**IV. கலைச்சொல் அறிவோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நோய் | – | Disease | பக்க விளைவு | – | Side Effect |
| மூலிகை | – | Herbs | நுண்ணுயிர் முறி | – | Antibiotic |
| சிறுதானியங்கள் | – | Millets | மரபணு | – | Gene |
| பட்டயக்கணக்கர் | – | Auditor | ஒவ்வாமை | – | Allergy |

**V. இணையத்தில் காண்க.**

**நாம் நாள்தோறும் உண்ணும் காய்கறிகளின் மருத்துவப் பயன்கள் பற்றித் தகவல்களைத் தேடித்திரட்டுக.**

**விடை :**

அவரைக்காய் : இரத்த அழுத்தம் உள்ளவர்க்கு இது மிகவும் ஏற்றது.
வெண்டைக்காய் : ஞாபக சக்தியை அதிகரிக்கும்.
வாழைத்தண்டு : சிறுநீரகக் கற்களைக் கரைக்கும்.
தேங்காய் : எலும்புகள் மற்றும் பற்களை வலுவடையச் செய்யும்.
சுரைக்காய் : உடல் சூட்டைத் தணிக்கும்.
கத்திரிக்காய் : இதயத்தின் பலத்தை அதிகரிக்கும்.
வாழைப்பூ : இரத்தச் சோகையைத் தடுக்கும்.
பாகற்காய் : உடலில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும்.
முருங்கைக்காய் : வைட்டமின் 'ஏ', 'பி', 'சி', பாஸ்பரஸ் மற்றும் இரும்புச் சத்து நிறைந்துள்ளது.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் ஐந்து

## 5. குழலினிது யாழினிது

கவிதைப்பேழை

இயல் ஐந்து

## 5.அ. திருக்கேதாரம் –செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. காட்டிலிருந்து வந்த _____ கரும்பைத் தின்றன.**

அ) முகில்கள் ஆ) முழவுகள்

இ) வேழங்கள் ஈ) வேய்கள் **விடை : இ) வேழங்கள்**

**2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) கனகச்+ சுனை ஆ) கனக + சுனை

இ) கனகம் + சுனை ஈ) கனம் + சுனை **விடை : இ) கனகம் + சுனை**

**3. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) முழவுதிர ஆ) முழவுதிரை

இ) முழவதிர ஈ) முழவுஅதிர **விடை : இ) முழவதிர**

---

**II. குறுவினா:**

**1. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை ?**

**விடை :**

★ தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாக மூங்கில்களால் ஆகிய புல்லாங்குழலும் முழவும் உள்ளன என்று கூறுகிறார் சுந்தரர்.

---

**III. சிறுவினா :**

**1. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார் ?**

**விடை :**

★ பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆகிய புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும்.

★ கண்களுக்கு இனிய குளிர்ச்சி தரும் ஒளியை உடைய பொன்வண்ண நீர்நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த்திவலைகளை வாரி இறைக்கும்.

★ நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மதயானைகள் மணிகளை வாரி வாரி வீசும்.

★ இவற்றால் இடையறாது எழும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாக முழங்கும்.

★ இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் ஆகும் என்று வருணனை செய்கிறார் சுந்தரர்.

---

**IV. சிந்தனை வினா**

**1. விழாக்களின்போது இசைக்கருவிகளை இசைக்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கும் என எழுதுக.**

**விடை :**

★ இசையின் மூலமாக இறைவனை அடையமுடியும் என்ற உணர்வு மேலோங்கி நின்றது.

★ கோயில்களில் இறைவழிபாட்டில் முக்கியமாக இடம் பெறுவது இசையாகும்.

★ இசையுடன் கூடிய ஒலியாக மேளங்கள், உடுக்கை, நாதஸ்வரம், நரம்புக்கருவிகள் எனப் பங்கு பெற்றன.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் கிடைக்கும் களிமண், பனையோலை போன்ற பொருள்களைப் பயன்படுத்திக் கைவினைப்பொருள்களைச் செய்து காட்சிப்படுத்துக.**
**விடை :**



**2. பனையோலையால் செய்யப்படும் பல்வேறு கைவினைப்பொருள்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**
**விடை :**



## விரிவானம்

**இயல் ஐந்து**

## 5. ஈ. தமிழர் இசைக்கருவிகள்
– துணைப்பாடம்

மதிப்பீடு

**காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.**
**விடை :**

**முன்னுரை :** மக்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி, குரல் வழியாக அல்லது செயற்கைக் கருவி ஒன்றின் வழியாக வெளிப்பட்டது. அக்கருவிகள் தோல்கருவி, நரம்புக்கருவி, காற்றுக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும். அவற்றுள் காற்றுக்கருவிகள் பற்றி அறிவோம்.

**காற்றுக் கருவிகள் :** காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை காற்றுக்கருவிகள் எனப்படும். அவை குழல், கொம்பு, சங்கு.

**குழல் :** காடுகளில் வளரும் மூங்கிலில் வண்டுகள் துளையிடும். அவற்றின் வழியாகக் காற்று வீசும்போது இன்னிசை எழும்பும். இதனைக் கேட்டு மகிழ்ந்த நம் முன்னோர் அமைத்துக் கொண்டவையே குழல்கள். இதனை வேய்ங்குழல், புல்லாங்குழல் என்றும் அழைப்பர். குழல் ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையதாக இருக்கும். இது சுமார் இருபது விரல் நீளம் உடையதாக இருக்கும். மூங்கில் மட்டுமன்றிச் சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன. கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்".
- திருக்குறள்

**கொம்பு :** மனிதர்கள் தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர். அதுவே பிற்காலத்தில் கொம்பு என்னும் இசைக்கருவிக்கு அடிப்படையாயிற்று. இக்காலத்தில் பித்தளை அல்லது வெண்கலத்தால் கொம்புகள் செய்யப்படுகின்றன. இதனை வேடர் வேட்டையின் போது ஊதுவர். கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள் விலங்குகள், கள்வரை விரட்டவும்

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மற்ற காவல்காரர்களை விழித்திருக்கச் செய்யவும் கொம்பினை ஊதுவர். ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின்போது இசைக்கப்படுகின்றன.

**சங்கு :**இஃது ஓர் இயற்கைக் கருவி. கடலில் இருந்து எடுக்கப்படுவது. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். கோயில் திருவிழாக்களின் போதும் சமயச் சடங்குகளின் போதும் சங்கு முழங்கும் வழக்கம் உண்டு.

"சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்"


- திருப்பாவை

**முடிவுரை :** பழமையான இசைக்கருவிகளைக் கற்று அதனைப் பயன்படுத்த வேண்டும்.

---

**கற்பவை கற்றபின்**

**1. இசைக்கருவிகளின் படங்களைத் திரட்டிப்படத்தொகுப்பு உருவாக்குக.**
**விடை :**



---

**2. இக்கால இசைக்கருவிகள் குறித்துக் கலைக்களஞ்சிய வடிவில் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**
**விடை :**

**வயலின் :** இது வில் மரத்தினாலான தந்திக் கருவியாகும். இது நான்கு தந்திகளைக் கொண்டுள்ளது. இத்தந்திகளின் மேல் வில் ஒன்றைக் குறுக்காக செலுத்துவதன் மூலம் வயலின் வாசிக்கப்படுகிறது.

**கிளாரினெட் :** துளைக் கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக்கருவியாகும். இது 71 செமீ நீளமும் 13 மி.மீ வரை அகலமும் கொண்டது.

**கித்தார் :** இது அதிர்வு கம்பிகள் கொண்ட ஒரு நரம்பு இசைக்கருவி ஆகும். இதிலுள்ள வெவ்வேறான தடிமன் கொண்ட நரம்புகளை மீட்டுவதன் மூலம் இசை பிறக்கும்.

---

**கற்கண்டு**

**இயல் ஐந்து**

## 5. உ. தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் – இலக்கணம்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது __________.**
அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை **விடை : அ) வேற்றுமைத்தொகை**

**2. "செம்மரம்" என்னும் சொல் __________ த் தொகை.**
அ) வினை ஆ) பண்பு
இ) அன்மொழி ஈ) உம்மை **விடை : ஆ) பண்பு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : இருப்பிடச் சான்றிதழ் வேண்டி

வணக்கம். எனக்குக் கல்விக்கான உதவித்தொகை பெற வேண்டியிருப்பதால், அதற்குத் தேவையான இருப்பிடச் சான்றிதழை மேற்காணும் முகவரியில் நான் வசிப்பதை உறுதிசெய்து, அச்சான்றிதழைத் தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

நாள்: இப்படிக்கு உண்மையுள்ள,

இடம் : பேரையூர் த. அன்பரசு

உறைமேல் முகவரி

பெறுநர் [அஞ்சல் தலை]
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
வட்டாட்சியர் அலுவலகம்
பேரையூர்
மதுரை மாவட்டம்.

---

# இயல் ஐந்து — 5. எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. குறுக்கெழுத்துப் புதிர்**

**விடை :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | த் | த | ள | ம் | | 2 வீ | ணை |
| க | | | டி | ண் | 3 க | 4 சே | 5 கு |
| ர | 6 தோ | | | | ஞ் | | டு |
| யா | ல் | சு | | ல் | 7 ச | ங் | கு |
| ழ் | | ர | | ழ | | | டு |
| | ழா | மு | ட | 8 கு | | | ப் |
| மு | | ண | | ர் | ண | 9 பா | பை |
| 10 ஏ | | 11 ம | | 12 கொ | ம் | பு | |

**இடமிருந்து வலம்**

1. முதற்கருவி எனப் பெயர் பெற்றது **விடை : மத்தளம்**
2. யாழிலிருந்து உருவான பிற்காலக் கருவி **விடை : வீணை**
7. இயற்கைக் கருவி **விடை : சங்கு**
12. விலங்கின் உறுப்பைப் பெயராகக் கொண்ட கருவி **விடை : கொம்பு**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**வலமிருந்து இடம்**

4. வட்டமான மணி போன்ற கருவி — விடை : சேகண்டி
8. ஐந்து வாய்களைக் கொண்ட கருவி — விடை : குடமுழா
9. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர் — விடை : பாணர்

**மேலிருந்து கீழ்**

1. 19 நரம்புகளைக் கொண்ட யாழ் — விடை : மகரயாழ்
3. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை________க் கருவி — விடை : கஞ்சு
5. சிறியவகை உடுக்கை — விடை : குடுகுடுப்பை
6. பறை ஒரு ________ கருவி — விடை : தோல்

**கீழிருந்து மேல்**

8. மூங்கிலால் செய்யப்படும் காற்றுக்கருவி — விடை : குழல்
10. வீணையில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கை — விடை : ஏழு
11. திருமணத்தின் போது கொட்டும் முரசு — விடை : மணமுரசு

**II. நிற்க அதற்குத் தக**

**என் பொறுப்புகள்...**

1. கைவினைக்கலைகளுள் ஒன்றைக் கற்றுக் கொள்வேன்.
2. இசைக் கலையை வளர்த்த சான்றோர்களைப் பற்றி அறிந்து போற்றுவேன்.

**III. கலைச்சொல் அறிவோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கைவினைப் பொருள்கள் | - | Crafts | பின்னுதல் | - | Knitting |
| புல்லாங்குழல் | - | Flute | கொம்பு | - | Horn |
| முரசு | - | Drum | கைவினைஞர் | - | Artisan |
| கூடைமுடைதல் | - | Basketry | சடங்கு | - | Rite |

**IV. இணையத்தில் காண்க.**

**இசையின் வகைப்பாடுகள் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி எழுதுக.**

**விடை :**

1. இந்துஸ்தானி இசை 2. கருநாடக இசை 3. சமகால இசை 4. பாவலர் இசை
5. உலோக இசை 6. கிராமிய இசை 7. தமிழிசை 8. மேற்கத்திய இசை

**வாழ்வியல்**

**இயல் ஐந்து**

## 5.ஏ. திருக்குறள் – செய்யுள்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. அரசரை அவரது ________ காப்பாற்றும்.**

அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை — **விடை : இ) குற்றமற்ற ஆட்சி**

**2. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ________ தகுதி அறிந்து பேச வேண்டும்.**

அ) சொல்லின் ஆ) அவையின்
இ) பொருளின் ஈ) பாடலின் — **விடை : ஆ) அவையின்**

**3. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது
இ) க + ஓடாது ஈ) கண்ணோ + ஆடாது — **விடை : அ) கண் + ஓடாது**

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் ஏழு

## 7. பாருக்குள்ளே நல்ல நாடு

கவிதைப்பேழை

இயல் ஏழு

## 7.அ. படை வேழம் – செய்யுள்

மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சிங்கம் ..............யில் வாழும்.**

அ) மாயை ஆ) ஊழி

இ) முழை ஈ) அலை **விடை : இ) முழை**

**2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ..............**

அ) வீரம் ஆ) அச்சம்

இ) நாணம் ஈ) மகிழ்ச்சி **விடை : ஆ) அச்சம்**

**3. "வெங்கரி" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது........**

அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி

இ) வெண் + கரி ஈ) வெங் + கரி **விடை : ஆ) வெம்மை + கரி**

**4. "என்றிருள்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**

அ) என் + இருள் ஆ) எட்டு + இருள்

இ) என்ற + இருள் ஈ) என்று + இருள் **விடை:ஈ)என்று +இருள்**

**5. போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........**

அ) போன்றன ஆ) போலன்றன

இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன **விடை : இ) போலுடன்றன**

---

**II. குறுவினா.**

**1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர் ?**

**விடை :**

★ சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர், தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர்.

★ தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர்.

★ தமது இறுதிக் காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

---

**2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர் ?**

**விடை :**

★ கலிங்க வீரர்கள் தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு அஞ்சி ஓடினர்.

---

**3. சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை ?**

**விடை :**

★ சோழனின் யானைப்படையைக் கண்ட கலிங்க வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்.

★ ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. சிறுவினா :**

**1. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப்படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப் பரணி கூறுவன யாவை ?**

**விடை :**

★ சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கப்படை வீரர்கள் இஃது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர். தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர்; தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி நடுங்கி படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர்.

★ சிலர் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். சிலர் யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

★ தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு அஞ்சி ஓடினர். தஞ்சம் வேண்டி வணங்கினர்.

★ சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின ; அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர் ; ஏனையோர் புறமுதுகுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.

---

**IV. சிந்தனை வினா :**

**1. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள் ?**

**விடை :**

★ மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண். – திருக்குறள்

★ ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவையாகச் சொல்லப்படுபவை, பயன்தரும் நீரும், வளம்மிக்க மண்ணும், நதிகளைப் படைக்கும் மலையும் மும்மாரி பெய்ய உதவும் நிழல்மிகு அடர்ந்த காடுகளும் ஆகும்.

---

**கூடுதல் வினாக்கள்–விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மண்டுதல் என்னும் சொல்லின் பொருள்**

அ) பாய்ச்சுதல் ஆ) பகைத்தல்
இ) நெருங்குதல் ஈ) தள்ளுதல் **விடை : இ) நெருங்குதல்**

**2. செயங்கொண்டார் பிறந்த ஊர் ............**

அ) தீபங்குடி ஆ) காரைக்குடி
இ) ஒட்டப்பிடாரம் ஈ) சின்னாளப்பட்டி **விடை : அ) தீபங்குடி**

**3. கலிங்கத்துப்பரணியை எழுதியவர்............**

அ) கபிலர் ஆ) சேக்கிழார்
இ) செயங்கொண்டார் ஈ) சீத்தலைச் சாத்தனார் **விடை : இ) செயங்கொண்டார்**

**4. கலிங்கத்துப்பரணி கொண்டுள்ள தாழிசைகள் ...........**

அ) 699 ஆ) 599
இ) 499 ஈ) 799 **விடை : ஆ) 599**

---

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் ............... போலப் பிளிறின. **விடை : இடியை**

2. .......... முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். **விடை : செயங்கொண்டார்**

3. கலிங்கத்துப்பரணியை..........என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார். **விடை : தென்தமிழ்த்தெய்வப்பரணி**

4. போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் .......... **விடை : பரணி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மறலி | – | தமிழர் |
| 2. கரி | – | காலன் |
| 3. அருவர் | – | யானை |
| 4. பிலம் | – | நழுவி ஓடுவர் |
| 5. வழிவர் | – | மலைக்குகை |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. மறலி** | – | **காலன்** |
| **2. கரி** | – | **யானை** |
| **3. அருவர்** | – | **தமிழர்** |
| **4. பிலம்** | – | **மலைக்குகை** |
| **5. வழிவர்** | – | **நழுவி ஓடுவர்** |

**IV. குறுவினா :**

**1. செயங்கொண்டார் – ஆசிரியர் குறிப்பு வரைக.**

**விடை :**

★ செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர்.

★ இவர் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்.

★ இவரைப் பரணிக்கோர் செயங்கொண்டார் என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் புகழ்ந்துள்ளார்.

**கற்பவை கற்றபின்**

**1. உங்களுக்குத் தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

**விடை :**

★ தமிழ் விடு தூது ★ மூவருலா ★ உலா ★ கலிங்கத்துப் பரணி

★ இரட்டை மணிமாலை ★ பிள்ளைத்தமிழ் ★ ஆசாரக் கோவை ★ நூற்றந்தாதி


★ கலம்பகம் ★ நந்திக் கலம்பகம் ★ கையறு நிலை ★ பள்ளு

★ சதகம் ★ குறத்திப் பாட்டு ★ குறவஞ்சி ★ உழத்திப் பாட்டு

★ தாண்டகம் ★ பதிகம் ★ வாயுறை வாழ்த்து

**2. போர்க்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**

**விடை:**



**கவிதைப்பேழை**

**இயல் ஏழு**

## 7.ஆ. விடுதலைத் திருநாள் – செய்யுள்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வானில் முழு நிலவு அழகாகத் ............ அளித்தது.**

அ) தயவு ஆ) தரிசனம்

இ) துணிவு ஈ) தயக்கம் **விடை : ஆ) தரிசனம்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஔவையார் (சுமதி) :** தொண்டைமானே ஏன் உன் முகம் மாறிவிட்டது ?
**தொண்டைமான் (கண்ணன்) :** உங்கள் சொற்கள் என்னைக் குழப்பிவிட்டன.
**ஔவையார் (சுமதி) :** என்ன குழப்பம் ?
**தொண்டைமான் (கண்ணன் ) :** என் படைக்கருவிகளின் அளவையும் அழகையும் பாராட்டிக் கூறினீர்கள். அதைக் கேட்ட என் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது.
**ஔவையார் (சுமதி) :** உண்மைதான். உனது படைக்கருவிகள் புது மெருகு குறையாமல் அப்படியே இருக்கின்றன.
**தொண்டைமான் (கண்ணன் ) :** அடுத்ததாக நீங்கள் கூறிய செய்திதான் என்னைச் சிந்திக்க வைத்துவிட்டது. அதியமானின் படைக்கருவிகள் போரில் பயன்படுத்தப்பட்டு வளைந்தும் நெளிந்தும் கிடக்கின்றன என்று கூறினீர்களே, அதுதான் எனக்கு உண்மையைப் புரிய வைத்தது.
**ஔவையார் (சுமதி) :** என்ன உண்மை புரிந்துகொண்டாய் ?
**தொண்டைமான் (கண்ணன் ) :** என்னிடம் கருவிகள்தாம் மிகுதியாக உள்ளன. நான் இதுவரை போர்க்களத்தைக் கண்டதில்லை. ஆனால் அதியமான் பல போர்களை நடத்தி வெற்றி கண்டவன். அவனோடு போர் புரிவது எத்தகைய அழிவைத் தரும் என்பதைப் புரிந்துகொண்டேன்.
**ஔவையார் (சுமதி) :** அருமை! அருமை! நான் கூறியதன் உட்பொருளைத் தெளிவாகப் புரிந்துகொண்டாய்.
**தொண்டைமான் (கண்ணன் ) :** என் கண்களைத் திறந்த தாயே, போர் வேண்டாம் என்று அதியமானிடம் கூறிவிடுங்கள்.
**ஔவையார் (சுமதி ) :** மிகவும் மகிழ்ச்சி தொண்டைமானே. அவ்வாறே கூறிவிடுகிறேன். போரில்லா மகிழ்ச்சியில் இந்த உலகம் திளைக்கட்டும். நான் சென்றுவருகிறேன்.
(ஔவையார் விடைபெற்றுச் செல்கிறார்)
(திரை)

**2. சங்ககாலப் பெண் புலவர்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**
**விடை :**

| | | |
|---|---|---|
| 1. ஔவையார் | 2. அஞ்சில் அஞ்சியார் | 3. காவற்பெண்டு |
| 4. வெண்பூதியார் | 5. மாசாத்தியார் | 6. நப்பசலையார் |
| 7. காக்கைப்பாடினியார் | 8. பொன்முடியார் | 9. வெள்ளிவீதியார் |
| 10. நன்முல்லையார் | 11. பொன்மணியார் | 12. ஆதிமந்தியார் |
| 13. வெண்ணிக்குயத்தியார் | | |

**கற்கண்டு**

**இயல் ஏழு**

## 7.உ வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் – இலக்கணம்

**மதிப்பீடு**

**I. பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.**

| | | விடை : |
|---|---|---|
| 1. சுட்டுத் திரிபு | – | **வல்லினம் மிகும்** |
| 2. திசைப்பெயர்கள் | – | **வல்லினம் மிகும்** |
| 3. பெயரெச்சம் | – | **வல்லினம் மிகாது** |
| 4. உவமைத் தொகை | – | **வல்லினம் மிகும்** |
| 5. நான்காம் வேற்றுமை விரி | – | **வல்லினம் மிகும்** |
| 6. இரண்டாம் வேற்றுமை தொகை | – | **வல்லினம் மிகாது** |
| 7. வினைத் தொகை | – | **வல்லினம் மிகாது** |
| 8. உருவகம் | – | **வல்லினம் மிகும்** |
| 9. எழுவாய்த் தொடர் | – | **வல்லினம் மிகாது** |
| 10. எதிர்மறைப் பெயரெச்சம் | – | **வல்லினம் மிகாது** |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**VII. கட்டுரை எழுதுக.**
**நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.**
**விடை :**

**முன்னுரை :** தடைகள் வெற்றியின் புதையல்; தடங்கல் வெற்றியின் தடங்கள். இவ்வரிகளை மெய்ப்பித்து தடைகளையும், தடங்கலையும் சாதனைகளாக மாற்றக்கூடிய வல்லமை பெற்றவர்கள் இளைஞர்கள்.

**புதிய பாதை :** புதிய இலக்குகள், புதிய முயற்சிகள் அனைத்தும் இருக்கும் அளப்பரிய ஆற்றல் கொண்டது இளைய சமுதாயம். அனைத்துப் பிரச்சனைகளையும் அரசுதான் தீர்க்க வேண்டும் என எண்ணாமல் இளைஞர்கள் அதற்குத் தீர்வு காணவேண்டும்.

**சமூக சேவை :** கணினி மற்றும் இயந்திரங்கள் மூலம் தொழில் வளர்ச்சி, விண்வெளித் தொழில்நுட்பம் போன்றவற்றை அறிந்து, துடிப்புடன் செயல்படும் இளைஞர்கள் சமூக அக்கறையோடு சமூக சேவை செய்திட வேண்டும்.


**முதுகெலும்பு :** இளையசமுதாயம்தான் நாட்டின் முதுகெலும்பு என்பதற்கேற்ப இன்றைய இளைஞர்கள் தங்களது முழு சக்தியை நல் வழியில் பயன்படுத்தி, நாட்டின் வளர்ச்சியில் பங்கு பெற வேண்டும்.

**முடிவுரை :** வெற்றிபெற முயற்சி மட்டும் போதாது. விடாமுயற்சி வேண்டும். மாறி மாறி முயன்றால் நடக்காததும் நடக்கும். கிடைக்காததும் கிடைக்கும்.

---

## இயல் ஏழு — 7. எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**




**விடை :**

வேழம், வேம்பு, வேற்றுமை, வேளை, வேடம், வேல், வேற்றுநாடு.
நாளை, நாம், நாற்று, நாடு, நாடகம்.
பழமை, பல், பழம், படம், பற்று, பதுகை, பகடு.
ஒற்றுமை, ஒருமை, ஒற்று.
கருமை, கம்பு, கடல், களை, கடமை, கடுமை, கரு, கடல், கற்று, கரும்பு.
துளை, துரும்பு.
புதுமை, புல், புற்று.
மைல்.

---

**II. கதை நிகழ்வுக்கேற்பச் சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துக.**

1. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்.
3. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
4. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
5. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.
6. தொண்டைமானிடம் ஔவை, அதியமானின் படைச் சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இயல் எட்டு

## 8. அறத்தால் வருவதே இன்பம்

இயல் எட்டு

## கவிதைப்பேழை

## 8.அ. ஒன்றே குலம் – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக்கவர வரும் .............. க் கண்டு அஞ்ச மாட்டார்கள்.**

அ) புலனை ஆ) அறனை
இ) நமனை ஈ) பலனை **விடை : இ) நமனை**

**2. ஒன்றே .............. என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்.**

அ) குலம் ஆ) குளம்
இ) குணம் ஈ) குடம் **விடை : அ) குலம்**

**3. "நமனில்லை" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.........**

அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை
இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை **விடை:ஈ) நமன் + இல்லை**

**4. நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........**

அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு
இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு **விடை : இ) நம்பர்க்கங்கு**

---

**II. குறுவினா :**

**1. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை ?**

**விடை :**

★ மனிதர் அனைவரும் ஒரே இனத்தவரே, உலகைக் காக்கும் இறைவனும் ஒருவரே என்ற கருத்துகளை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை.

---

**2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது ?**

**விடை :**

★ உலகத்து மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவராயின், மனிதர் அனைவரும் ஒரே இனத்தவரே, உலகைக் காக்கும் இறைவனும் ஒருவரே என்ற கருத்துகளை மனத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இதைவிட வேறு நல்வழி இல்லை.

---

**III. சிறுவினா.**

**1. மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது ?**

**விடை :**

★ படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒருபொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் கோயிலாகிய உடம்பையுடைய அடியார்களுக்குச் சேராது.

★ அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும் என்று திருமூலர் கூறுகிறார்.

---



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



கற்கண்டு

இயல் எட்டு

## 8.உ. யாப்பு இலக்கணம் – இலக்கணம்

மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. அசை ............ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து **விடை : அ) இரண்டு**

**2. விடும் என்பது ............ சீர்.**

அ) நேரசை ஆ) நிரையசை

இ) மூவசை ஈ) நாலசை **விடை : ஆ) நிரையசை**

**3. அடி ............ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) நான்கு

இ) எட்டு ஈ) ஐந்து **விடை : ஈ) ஐந்து**

**4. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ............**

அ) எதுகை ஆ) இயைபு

இ) அந்தாதி ஈ) மோனை **விடை : ஈ) மோனை**

**II. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெண்பா | – | துள்ளல் ஓசை |
| 2. | ஆசிரியப்பா | – | செப்பலோசை |
| 3. | கலிப்பா | – | தூங்கலோசை |
| 4. | வஞ்சிப்பா | – | அகவலோசை |

**விடைகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | **வெண்பா** | – | **செப்பலோசை** |
| 2. | **ஆசிரியப்பா** | – | **அகவலோசை** |
| 3. | **கலிப்பா** | – | **துள்ளல் ஓசை** |
| 4. | **வஞ்சிப்பா** | – | **தூங்கலோசை** |

**III. சிறுவினா**

**1. இருவகை அசைகளையும் விளக்குக.**

**விடை :**

★ எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது அசை. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

1. குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும்.
(எ.கா) ந, நம், நா, நாம்.

2. இரண்டு குறில் எழுத்துகள் அல்லது குறில், நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும்.
(எ.கா) கட, கடல், கடா, கடாம்.

**2. தளை என்பது யாது ?**

**விடை :**

★ சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர்.

★ முதல் சீரின் இறுதியிலும் வரும் சீரின் முதலிலும் உள்ள அசைகள் எவ்வகை அசைகள் என்பதன் அடிப்படையில், தளைகள் ஏழு வகைப்படும்.

**3. அந்தாதி என்றால் என்ன ?**

**விடை :**

★ ஒரு பாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல் சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதி எனப்படும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**IV. சிறுவினா**

**முதன்மையான தொடைகளைக் கூறுக.**

**விடை :**


1. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை.
2. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.
3. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.
4. ஒரு பாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல் சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை.

**கற்பவை கற்றபின்**


**1. எழுத்து இலக்கணத்தின்படியும் யாப்பு இலக்கணத்தின்படியும் எழுத்துகளின் வகைகளை வேறுபடுத்தி ஓர் அட்டவணை உருவாக்குக.**

**விடை :**

**எழுத்து இலக்கணத்தின்படி எழுத்துகளின் வகைகள்**




**யாப்பு இலக்கணத்தின்படி எழுத்துகளின் வகைகள்**




**2. வெண்பாக்களால் அமைந்த நூல்களின் பெயர்களைத் திரட்டுக.**

**விடை :**

1. திருக்குறள்
2. ஏலாதி
3. திரிகடுகம்
4. சிறுபஞ்சமூலம்
5. நாலடியார்
6. இன்னாநாற்பது
7. இனியவை நாற்பது
8. நான்மணிக்கடிகை
9. மூதுரை
10. நல்வழி
11. நளவெண்பா
12. முத்தொள்ளாயிரம்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



**இயல் எட்டு**

# 8.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. படத்தைப் பார்த்து எழுதுக.**




**விடை :**

| | | |
|---|---|---|
| ஓரெழுத்துச் சொல் | ஆ | பூ |
| இரண்டு எழுத்துச் சொல் | பசு | வாழை |
| மூன்று எழுத்துச் சொல் | கன்று | சீப்பு |
| நான்கு எழுத்துச் சொல் | கால்கள் | இலைகள் |
| ஐந்து எழுத்துச் சொல் | கொம்புகள் | கன்றுகள் |

**II. நிற்க அதற்குத் தக...**

**என் பொறுப்புகள்...**

1. அறக்கருத்துகளைப் படித்து, வாழ்வில் பின்பற்றுவேன்.
2. அறவாழ்வு வாழ்ந்த சான்றோர்களைப்பற்றி அறிந்து போற்றுவேன்.

**III. கலைச்சொல் அறிவோம்**

தொண்டு– ***Charity*** நேர்மை– ***Integrity***
ஞானி – ***Saint*** பகுத்தறிவு– ***Rational***
தத்துவம் – ***Philosophy*** சீர்திருத்தம்– ***Reform***

**IV. இணையத்தில் காண்க**

**சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த சான்றோர்களின் பெயர்ப்பட்டியலை இணையத்தில் தேடித் தொகுக்க.**

**விடை :**

1. தந்தை பெரியார் 2. பாரதியார் 3. அம்பேத்கர் 4. பாரதிதாசன்
5. அயோத்திதாசர் 6. விவேகானந்தர் 7. இராஜாராம் மோகன்ராய் 8. தயானந்த சரசுவதி

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



வாழ்வியல்

## இயல் எட்டு — 8. ஏ. திருக்குறள் – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆண்மையின் கூர்மை ............**

அ) வறியவருக்கு உதவுதல் ஆ) பகைவருக்கு உதவுதல்
இ) நண்பனுக்கு உதவுதல் ஈ) உறவினருக்கு உதவுதல்

**விடை : ஆ) பகைவருக்கு உதவுதல்**

**2. வறுமை வந்த காலத்தில் ............. குறையாமல் வாழவேண்டும்.**

அ) இன்பம் ஆ) தூக்கம்
இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

**விடை : இ) ஊக்கம்**

**3. "பெருஞ்செல்வம்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது........**

அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்
இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

**விடை : ஈ) பெருமை + செல்வம்**

**4. "ஊராண்மை" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........**

அ) ஊர் + ஆண்மை ஆ) ஊராண் + மை
இ) ஊ + ஆண்மை ஈ) ஊரு + ஆண்மை

**விடை : அ) ஊர் + ஆண்மை**

**5. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........**

அ) திரிந்தது அற்று ஆ) திரிந்தற்று
இ) திரிந்துற்று ஈ) திரிவுற்று

**விடை : ஆ) திரிந்தற்று**

**II. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | இன்பம் தருவது | – | நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம் |
| 2. | நட்பு என்பது | – | குன்றிமணியளவு தவறு |
| 3. | பெருமையை அழிப்பது | – | செல்வம் மிகுந்த காலம் |
| 4. | பணிவு கொள்ளும் காலம் | – | சிரித்து மகிழ மட்டுமன்று |
| 5. | பயனின்றி அழிவது | – | பண்புடையவர் நட்பு |

**விடைகள் :**

| | | | |
|---|---|---|---|
| **1.** | **இன்பம் தருவது** | **–** | **பண்புடையவர் நட்பு** |
| **2.** | **நட்பு என்பது** | **–** | **சிரித்து மகிழ மட்டுமன்று** |
| **3.** | **பெருமையை அழிப்பது** | **–** | **குன்றிமணியளவு தவறு** |
| **4.** | **பணிவு கொள்ளும் காலம்** | **–** | **செல்வம் மிகுந்த காலம்** |
| **5.** | **பயனின்றி அழிவது** | **–** | **நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்** |

**III. குறுவினா**

**1. எது பெருமையைத் தரும் ?**

**விடை :**

காட்டுமுயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும். (பெரிய முயற்சியே பெருமை தரும்.)

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது ?**
**விடை :**
நமக்கு வரும் துன்பத்தினாலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும்.

**3. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது ?**
**விடை :**
பண்பு உடைய சான்றோரின் வழியில் நடப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது என்று திருக்குறள் கூறுகிறது.

**4. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் ?**
**விடை :**
நட்பு, நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**IV. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.**



**விடை : 1. <u>கான முயல்எய்த அம்பினில் யானை</u>**
**<u>பிழைத்தவேல் ஏந்தல் இனிது</u>.**

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
**1. எஃகு என்னும் சொல்லின் பொருள்**
அ) வளமை ஆ) பெருமை
இ) செழுமை ஈ) கூர்மை **விடை : ஈ) கூர்மை**

**2. பண்பு + உடையார் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்**
அ) பண்புடையவர் ஆ) பண்புஉடையார்
இ) பண்புடையார் ஈ) பண்புடையர் **விடை : இ) பண்புடையார்**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**
1. நகுதல் என்பது ............ ஆகும். **விடை : சிரித்தல்**
2. துயரம் என்பதன் பொருள் ............ **விடை : துன்பம்**
3. பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ............ என்பர். **விடை : ஆண்மை**

**III. குறுவினா.**
**பெருமையை அழித்துவிடுவது எது ?**
**விடை :**
மலையளவு பெருமை உடையவராக இருந்தாலும் குன்றி மணியளவு தவறு செய்தால் அது அவரது பெருமையை அழித்துவிடும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இயல் ஒன்பது**

## 9.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி

**I. கேட்க :**

**தன்னம்பிக்கையை வளர்க்கும் கதைகளைப் பெரியவர்களிடம் கேட்டு மகிழ்க.**

**விடை :**

ஒருகாட்டிற்கு இரண்டு மரவெட்டிகள் சென்றார்கள். மாலை மீண்டும் இருவரும் கூடும்போது ஒருவரிடம் அதிக விறகும் மேலும் அவர் அதிக களைப்படையாமலும் இருந்தார். மற்றொருவருக்கோ பயங்கர ஆச்சரியம். நம்மைப் போலத்தானே அவனும், அவனால் மட்டும் எப்படி இது சாத்தியமானது ? என்று ஆர்வம் தாங்காமல் கேட்டான்.

"இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் ?" அவன் சொன்னான், "நான் அடிக்கடி ஓய்வு எடுத்துக்கொண்டு விறகு வெட்டுவேன். அதனால் களைப்படையவில்லை" என்றான்.

மறுநாள் இவனும் அதேபோல் விறகு வெட்டினான். ஆனால் அந்த அளவு விறகு வெட்டவில்லை. மறுநாள் மரம் வெட்டச் செல்லும்போது, அவன் நண்பனைப் பின்தொடர்ந்து சென்றான். நண்பனும் அரைமணி நேரம் வெட்டிவிட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால் அவனுடைய ஓய்வு நேரத்தில் கோடாரியைத் தீட்டிக்கொண்டிருந்தான். இதுவே அவன் அதிகமாக விறகு வெட்டக் காரணமாகும்.

---

**II. கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**விடை :**

**1. நம்பிக்கையே உயர்வு**

அவையோர்க்கு வணக்கம் !

★ நம்பிக்கையே உயர்வு தரும். நமக்கு எப்போதும் அது கை கொடுக்கும். எதை வேண்டுமானாலும் தன்னம்பிக்கையோடும், நியாயமான ஆசைகளோடும் முயற்சி செய்யலாம்.

★ அதைச் சாதிக்க திறமை வேண்டும். கடின உழைப்பு வேண்டும். "செயல் என்பது உயிரின் இசை" என்றொரு பழமொழி உண்டு. நம்பிக்கையானது துணிச்சலைத் தட்டி எழுப்புகிறது. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாததாகும் என்று சொன்னவர் விவேகானந்தர்.

★ எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும்.

★ ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுள் இருக்கின்ற தனித்தன்மையை வெளிக்கொணர்ந்தால் சிகரத்தைத் தொட்டுவிட முடியும்.

---

**2. நல்வாழ்விற்குத் தேவையான நற்பண்புகள்.**

**விடை :**

அவையோர்க்கு வணக்கம் !

★ ஒழுக்கம், பணிவு, விட்டுக்கொடுத்தல், பிறரை மதித்தல், உதவி செய்தல், நேர்மை போன்ற நற்பண்புகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டும்.

★ நற்பண்புகள்தான் ஒருவனை எந்த நிலையிலும் தலைகுனியவிடாது. எந்த இடத்திலும் தலை நிமிர்த்தி நடைபோட வைக்கும். யாரையும் தைரியமாக சந்திக்கும் துணிவைத் தரும். எனவே மாணவர்கள் எந்த சூழலிலும் தவறான வழிகளைத் தேர்ந்தெடுத்துவிடக் கூடாது.

★ எப்போதும் நல்ல வழிகளில் நம்பிக்கை கொண்டு பயணிக்க வேண்டும். அதற்கு தேவையான பண்புகளை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

★ வாழ்க்கை என்பது வெற்றியை மட்டும் நோக்கியது என்று கருதி செயல்பட்டால் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் இழக்க நேரிடும். எனவே வறுமை வாட்டிய நிலையிலும் நற்பண்புகளோடு வாழ்கிறவர்கள் எப்போதும் மதிப்பிற்குரியவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள்.

★ நற்பண்புகள்தான் ஒருவருடைய பெயருக்கான உண்மையான அடையாளமாக வெற்றியாகத் திகழும். நற்பண்புகள்தான் ஒரு மனிதன் கற்ற சிறந்த கல்வியாக இருக்கும்.

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. சொல்லக்கேட்டு எழுதுக.**

அம்பேத்கர் தமது வாழ்க்கையில் "புதிய திருப்பம்" காண வழி ஒன்றைக் கண்டறிந்தார். அது, "படிப்பு, படிப்பு, படிப்பே" ஆகும். அதை அடையும் முயற்சியில் அயராது உழைக்கத்தொடங்கினார். எப்போதும் புத்தகமும் கையுமாகவே திகழ்ந்தார். இதைக் கண்ட அவருடைய தந்தை வேறு செலவுகளைக் குறைத்துக்கொண்டும் கடன் வாங்கியும் புத்தகங்களை வாங்கித் தந்தார். புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை அம்பேத்கர் கடைசிவரை கடைப்பிடித்தார். வட்டமேசை மாநாட்டிற்காக அம்பேத்கர் இங்கிலாந்து சென்றார். மாநாடு முடிந்த பிறகு அமெரிக்கா சென்ற அவர் தம் பழைய நண்பர்களையும் பேராசிரியர்களையும் கண்டு மகிழ்ந்தார். தாய்நாடு திரும்பியபோது பதினான்கு பெட்டிகள் நிறையப் புத்தகங்களைக் கொண்டு வந்தார்.

---

**IV. அறிந்து பயன்படுத்துவோம்.**

**தான், தாம் என்னும் சொற்கள்**

தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும். இவ்வேறுபாட்டினை அறிந்து தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.,

தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்தவேண்டும்.

தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்தவேண்டும்.

(எ.கா) தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
மாணவன் தனது கையால் பெற்றுக்கொண்டான்.

(இங்கு தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்)

(எ.கா) மாடுகள் தமது தலையை ஆட்டின.
கன்று தனது தலையை ஆட்டியது.

---

**V. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. சிறுமி ........... (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.
   **விடை : சிறுமி <u>தனது</u> கையில் மலர்களை வைத்திருந்தாள்.**
2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் ........... (தனது / தமது) உழைப்பை நல்கினார்.
   **விடை : அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் <u>தமது</u> உழைப்பை நல்கினார்**
3. உயர்ந்தோர் ........... (தம்மைத்தாமே / தன்னைத்தானே) புகழ்ந்துகொள்ள மாட்டார்கள்.
   **விடை : உயர்ந்தோர் <u>தம்மைத்தாமே</u> புகழ்ந்துகொள்ள மாட்டார்கள்.**
4. இவை ........... (தான் / தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.
   **விடை : இவை <u>தாம்</u> எனக்குப் பிடித்த நூல்கள்.**
5. குழந்தைகள் ........... (தன்னால் / தம்மால் ) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.
   **விடை : குழந்தைகள் <u>தம்மால்</u> இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.**

---

**VI. தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தம்முடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள்தான் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

**விடை :**

முதியவர் ஒருவர் **<u>தமது</u>** கால்களில் செருப்பில்லாமல் **<u>தம்மால்</u>** இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா **<u>தன்னுடைய</u>** சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள்**<u>தாம்</u>** இருந்தன. எனவே, **<u>தமது</u>** வேறு காலணிகளைப் பிறகு தருவதாக சித்தப்பா கூறினார்.

---

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**VII. கட்டுரை எழுதுக.**

**உழைப்பே உயர்வு**

**குறிப்புச் சட்டகம் :**

**முன்னுரை, உழைப்பின் மேன்மை, செய்யும் தொழிலே தெய்வம், உழைப்பின் மதிப்பு, முடிவுரை.**

**முன்னுரை :** "உழைத்து வாழ வேண்டும் – பிறர்
உழைக்க வாழ்ந்திடாதே"

நாம் வாழ்க்கையில் முன்னேற மற்றொரு வழி என்னவென்றால் உழைப்புதான். உழைப்பே உயர்வு. நமது கடமையைச் சரியாகச் செய்யவேண்டும். கடனுக்குச் செய்யக்கூடாது.

**உழைப்பின் மேன்மை :** பணத்தை வைத்து மனிதனை எடை போடுகிறார்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு மதிப்பு வைத்துள்ளார்கள். எந்தத் தொழிலும் குறைந்தது அல்ல. செருப்பு தைப்பதும் ஒரு புனிதமான தொழில்தான். அதுவும் ஒரு தொழில்தான்.

"உழைத்தால் வெற்றி நிச்சயம்"

**செய்யும் தொழிலே தெய்வம் :**

"உழவுத் தொழிலே உயர்வான தொழில்"

தண்ணீர் பற்றாக்குறை சமயங்களிலும் ஒரு சில இக்கட்டான சமயங்களிலும் வயல் இருக்கும் பயிர்களோடு நாள் கணக்கில் தண்ணீர் தேங்கியிருந்தால் ஒரு வாசனை வீசும். இதனை அறியாதார் இது என்ன நாற்றமடிக்கிறது ? என்பர். உழவுத் தொழிலின் பெருமையையும் மண்ணின் மனத்தையும் அதன் வாழ்வையும் அறியாதவர் அவர். உழவுத் தொழிலே உயிரினைக் காக்கும் தொழில் ஆகும்.

**உழைப்பின் மதிப்பு :** யாரும் ஒருவர் செய்யும் தொழிலை வைத்து மதிப்பிட வேண்டாம். அனைவரையும் சமமாக எண்ணவேண்டும். அதனால் எந்தத் தொழில் என்று மதிப்பு கொடுக்காமல் உழைக்கும் ஒவ்வொருவருக்கும் மதிப்பு அளிக்கவேண்டும். உழைக்காமல் உயரவேண்டும் என்று நினைத்தால் நிச்சயமாக முன்னேற முடியாது. பொய்பேசுவது, ஏமாற்றுவது மற்றும் திருடுவது இது போன்ற பழக்கவழக்கங்கள்தான் தவறாகும். உழைப்பால் உயர்ந்தவை எல்லாம் மதிப்பானவை.

**முடிவுரை :**

"காரியத்தோடு செய்துபார்
காலமும் கைகூடிவரும்"

சுமை தூக்குவதைவிட சுகமாக தூக்கிப்பார்த்தால் நீயும் மற்றவருக்கு ஏணியாக இருப்பாய். நாம் செய்யும் தொழிலில் ஆயிரம் தடைக்கற்கள் வந்து விழும். நம்மைச் சாதிக்கவிடாமலிருக்கும் தடைக்கற்களை வாழ்க்கையின் படிக்கற்களாக மாற்ற நம்மால்தான் முடியும். முகமலர்ச்சியுடன் செய்யும் தொழிலே உழைப்பின் உயர்வையும் தரும்.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


# செலக்சன்

எங்கள் வெளியீடுகள்

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

3 முதல் 6 வகுப்பு வரை 5 in 1

தமிழ் வழி & ஆங்கில வழி

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி

மதுரை - **625001**

94430 43338

94430 46662


Kindly send me your study materials to padasalai.net@gmail.com